# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 13 12–06–1992 ( யூன் 12 — யூன் 26 ) இலங்கையின் ஓரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50



16-06-1992 யாழ்ப்பாணம்


### எழுத்தாளர்களுக்கு

பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் உங்களிடமிருந்தே எதிர்பார்க்கப் படுகின்றன. சமய, சமூக, புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்ட சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், மணிக்கதைகள் போன்ற ஆக்கங்களை [illegible]. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)

# சர்வ மதத் தலைவர்களின் ஏற்பாட்டில் மௌன பேரணி

## செ. சி. சங்கத்திடமும் அரச அதிபரிடமும் மகஜர் கையளிப்பு

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிடம் வட—கிழக்கில் உள்ள வழிபாட்டு இடங்களை பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையும், அரச அதிபரிடம் ஆலயங்கள் பாதிக்கப்பட்ட உண்மை நிலையை ஆதாரங்களோடும், சேதவிபரங்களோடும் அறிக்கைமூலம் மேன்மைதங்கிய ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டன.**

அடுத்து அடுத்து ஆலயங்கள் தாக்கப்பட்டதையும், அங்கு குழுமிநின்ற பக்தர்கள், அகதிகள் அவலமரணமடைய நேர்ந்ததையும் கண்டித்து சர்வ மத சமூக ஒன்றியத்தினால் மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மௌனப் பேரணியானது கடந்த சனிக்கிழமை 6 ஆம் திகதி பெருவெற்றியளித்த திரட்சனமானது. இப்பேரணியானது நல்லூர் கந்தசாமி கோவில் சதுக்கத்திலிருந்து ஆரம்பமாகியது. சர்வமதத் தலைவர்கள் முன்செல்ல பல்வேறு சமூக அமைப்புக்களாக அணிதிரண்ட பல்லாயிரக்கணக்கான மக்களும், அவர்கள் பின் வழி நடந்தனர். பேரணியின் உச்சகட்டமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும், யாழ். அரச அதிபரிடமும் மகஜர்கள் சமர்ப்பிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்தப் பேரணியின் வெற்றியானது எவ்வித சமூக, வர்க்க பேதமும் இன்றி சர்வ மதத்தினரும், அனைத்து சமூக அமைப்புகளும் இணைந்து பங்கெடுத்ததிலேயே தங்கியிருந்தது. இது இன்றைய தமிழ் மக்களின் பக்கசார்பற்ற ஏகோபித்த கோரிக்கை என்பதை அனைத்துலகிற்கும் எடுத்துக்காட்டும் நடவடிக்கையாக இருந்தது. கணிசமான அளவு கத்தோலிக்க, கிறிஸ்தவ குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கலந்து கொண்டமை கண்கூடு. இவர்கள் எத்தனையோ கிறிஸ்தவ தேவாலயங்கள் பாதிக்கப்பட்டபோதும் குறிப்பாக யாழ். ஆசனக்கோவில், முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயம், அளம்பில் புனித அந்தோனியார் ஆலயம், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆலயங்கள் பெரும் பாதிப்புக்குள்ளானபோதும் தமக்கென ஒரு பேரணி ஏற்பாடு செய்யாது, முல்லை வற்றாப்பளை அம்மன்கோவிலும் தெல்லிப்பூரீ துர்க்காதேவி அம்மன் கோவிலும் பாதிக்கப்பட்டபோது ஏற்பாடு செய்த பேரணியில் பெரும்பாலானோர் பங்கெடுத்தது வரவேற்கத்தக்க விடயமாகவே இருந்தது. ஆனாலும் சர்வ மத சமூக ஒன்றியம் கடந்த காலங்களில் பாதிப்புக்கு உள்ளான சர்வ மத ஆலய வழிபாட்டு ஸ்தலங்கள் பற்றிய முழுவிபரங்களையும் திரட்டி அண்மைக் கால நிகழ்வுகளுக்கு ஆதாரம் காட்டியிருக்கலாம். இது இவர்களது கோரிக்கைக்கு பன்மடங்கு பக்கபலமாகவும் இருந்திருக்கும்.

## புதுவித கருத்தடைக்கு பெண்கள் எதிர்ப்பு

இந்திய அரசு ஒரு புதிய கருத்தடை முறையைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளமையை புதுடில்லியிலுள்ள பல பெண்கள் குழுக்கள் எதிர்த்துள்ளன. இதனால் புதிய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுமென அவர்கள் எச்சரித்துள்ளனர்.

நோர்பிளான்ட் ஆர் என்னும் கருத்தடை சாதனத்தை 20,000 பெண்கள் மீது பரீட்சித்துப்பார்க்க வைத்திய ஆய்வு சபைக்கு அரசாங்கம் அனுமதி அளித்ததையிட்டே இந்த எதிர்ப்பு ஏற்பட்டது.

நோர்பிளான்ட் ஆர் என்னும் சாதனத்தில் ஆறு ஹோர்மோன் குழாய்கள் பெண்ணின் கையில் அறுவைமூலம் வைக்கப் படுகின்றன. இது சுமார் ஐந்து வருடங்களுக்கு கருத்தரிப்பதைத் தடைசெய்கிறது. இக்குழாய்கள் எடுக்கப்பட்டபின் உடல் தனது வழக்கமான நிலையை அடைகிறது.

நாட்டின் வைத்திய சேவைகள் திருப்தியற்ற நிலையில் இருக்கும்போது இம்முறை சாதாரண பெண்களின் உயிருக்கே ஆபத்து விளைக்கலாம் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு எதிர்ப்பைக் கொண்டுவந்த பெண்கள் குழுக்களில் எதுவும் திருச்சபையைச் சார்ந்தன அல்ல என்பதும், அவை பொதுவாக கருத்தடையை ஆதரிப்பவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புனித சவேரியாரின் வருகையின் 450வது ஆண்டு

புனித சவேரியார் வருகையின் 450 வது ஆண்டு கோவாவில் மே 6ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இப்பிரதேசத்துக்கு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொண்டுவந்த சவேரியார் 1542இல் அம்மண்ணில் காலடி எடுத்துவைத்தார். அவரே கோவாவின் முதல் யேசுசபை மாகாண அதிபராக இருந்தார்.

இவ்விழாவின்போது சவேரியார் கொண்டுவந்த கிறிஸ்துவின் நற்செய்திக்காக இறைவனுக்கு நன்றி கூறவும் அதைப் பற்றித் தியானிக்கவும் ஆறாம் திகதிக்கு முந்திய மூன்று தினங்களும் செபதினங்களாக அனுசரிக்குமாறு பேராயர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

விழாவின்போது பெருந்தொகையான யாத்திரீகள் இத்தலத்தைத் தரிசிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.

## சமயத்தை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாகாது

வாக்காளர் மத்தியில் ஆதரவைப் பெறுவதற்காக அரசியல்வாதிகள் மதத்தைப் பயன்படுத்துவதை கத்தோலிக்க ஆயர்களும், பௌத்ததலைவர்களும் கண்டித்துள்ளனர்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கத்தோலிக்க அமைச்சர்களுக்கும் பிற பதவியிலுள்ள கத்தோலிக்கருக்கும் விடுத்துள்ள ஒரு கடிதத்தில் பிற மத வைபவங்களிற் கலந்து கொள்வது பற்றியும், பிற மதத்தவருக்கு கத்தோலிக்க திருச்சடங்குகளை அளிப்பது பற்றியும் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

அதே சமயத்தில் களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான வண வல்பொல ராகுல எழுத்தாளர் சங்கமொன்றில் பேசும்போது சில நற்காரியங்கள் வெறும் பிரசாரத்துக்காக செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டார். பிரசாரத்துக்காக குழந்தைகளுக்கு காவியுடைதரிப்பதும், ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இராணுவப் படைகளுக்கும் ஆசிர்வாதம் வேண்டி போதி பூசை செய்வதும் பௌத்த மதத்தைப் பேணும் செயல்களல்ல என்று அவர் கூறினார்.

## கொரியப் பெரியாருக்கு பரிசு

இவ்வாண்டு டெம்பிள்ற்றன் பரிசு தென்கொரியாவைச் சேர்ந்த வண. கியுங் சிக் ஹான் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் 60,000 அங்கத்தவர்களைக் கொண்ட யொங்நாக் திருச்சபையின் தாபகராவார்.

ஒரு மில்லியன் டாலர்களைக் கொண்ட இப்பரிசு சமய முன்னேற்றத்துக்காக உழைத்த ஒருவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுவது. உலகில் ஆகக்கூடிய தொகையை—நோபல் பரிசைவிட அதிகம்—அளிக்கும் பரிசு இதுவே. இதனை இதற்கு முன் பெற்றவர்கள் அன்னைதிரேசா, பில்லி கிறஹம், இனமுல்லா கான் முதலியோர் ஆவர்.

அமெரிக்க கோடீஸ்வரரான ஜோண் டெம்பிள்ற்றன் என்பவரே இப்பரிசை ஏற்படுத்தியவர். 1972இல் இது ஏற்படுத்தப்பட்டது. மத வேறுபாடு கருதாது இப்பரிசு அளிக்கப்பட்டு வருகிறது.

## ஆயர்களின் கண் தானம்

கேரளத்திலுள்ள சகல கத்தோலிக்க ஆயர்களும் மரணத்தின்பின் தமது கண்களைத் தானம் செய்வதாக ஒப்பந்தம் செய்துள்ளனர் என்று கேரள கண்தான சங்கத்தின் உபதலைவரான பிதா ரொக்கிவாழப்பள்ளி கூறியுள்ளார்.

கண்தானம், இரத்ததானம் ஆகியவை பற்றி பிதா ரொக்கி எழுதிய நூலொன்று இரிஞ்சலகுடா ஆயர் மார் ஜேம்ஸ் பழயட்டிலினால் வெளியிடப்பட்டுள்ளது. கண்கள் எவ்வாறு எடுக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன என்பதுபற்றிய ஒளிப்பதிவு நாடாவும் வெளியிடப்பட்டுள்ளது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# எங்கே நிம்மதி?

யுத்த நெருக்கடி அண்மிக்கும் காலகட்டத்தில் எமது மக்கள் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிமுகாம்களிலும் தஞ்சமடைகின்றார்கள். ஆனால் அண்மைக்கால நிகழ்வுகளினால் அங்கேயும் நிம்மதியற்ற நிர்க்கதியான நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை 6ஆம் திகதி தமது ஏகோபித்த குரலெழுப்பி மௌன ஊர்வலத்தினாலும், மகஜர் மூலமும் ''தஞ்சமடையும் இடங்களைப் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய'' அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்த நிகழ்வு இரண்டு அடிப்படை உண்மைகளை வெளிப்படுத்தி நிற்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. முதன்மையாக அடிப்படை உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில், எங்குமே உயிருக்கு உத்தரவாதம் இல்லாத மக்களின் உணர்வுபூர்வமான வெளிப்பாடாகவே இந்த ஊர்வலம் அமைந்திருந்தது. அடுத்து எந்தவித வர்க்கபேதமும் இல்லாது மக்களும், மதத் தலைவர்களும் ஒருங்கிணைந்து நடாத்திய எழுச்சிப் பேரணியாக அமைந்திருந்தது. ஆனாலும் வரலாற்றின் சில கடுமையான நிகழ்வுகள் ஊடாகத்தான் நாம் சில நன்மைத்தனமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமா என்றும் சிந்திக்கத் தோன்றுகின்றது. இன்றைய எமது இக்கட்டான சூழ்நிலைகளும், இழிநிலைகளும் கடுமையான வழியில் சில பாடங்களைக் கற்றுத்தருகின்றன என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரமாகவே அமைகின்றது.

அரசாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கின்றபோது ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், அகதிமுகாம்களிலும் தஞ்சமடையுமாறு அறிவித்துவிட்டு அங்கு தஞ்சமடையும் மக்களைத் தாக்குவது வீட்டுக்கு அழைத்தவரை அடித்து அனுப்புவது போலல்லவா இருக்கிறது. இது மக்களிடையே நம்பிக்கையற்ற தன்மையையே உருவாக்கி இருக்கிறது. வற்றாப்பளையில் அம்மன் கோவிலில் வழிபடச் சென்றவர்களும், துர்க்கையம்மன் கோவிலில் அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களும், தாக்கப்பட்டு கொலையுண்டது யுத்த தர்மத்துக்குப் புறம்பானதும், மனித நேயத்துக்கு அப்பாற்பட்டதும், மதத்தையும், ஆலயங்களையும் அவமதிக்கும் செயல்களாகவுமே அமைகின்றன.

ஒருபக்கம் சண்டை, மறுபக்கம் சமாதானம் என்னும் இரட்டைத் தீர்வுகாணும் முயற்சி வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சும் தீர்வாகவே அமைகின்றது. சண்டை இருக்கும்வரை சமாதானம் தோன்றாது என்பது உலகறிந்த உண்மையே. எனவே சண்டையை நிறுத்தி சமாதானத்துக்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுப்பதே இதயசுத்தியான நடவடிக்கையாகும்.

எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் எங்குமே நிம்மதி காணமுடியாத நிர்க்கதியான வாழ்வுக்கே தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ள நிலையினை நாம் காண்கின்றோம். இந்த நிலை எம்மவர்க்கு உலகம் தரமுடியாத சமாதானத்தை, நிம்மதியை நாடிநிற்கத் தூண்டுகின்றது. எமது இயலாமைகளின் மத்தியிலே எமக்கு அப்பாற்பட்ட இறைசக்தியின் ஆற்றலால் மட்டுமே ஆகக்கூடிய ஒரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே சர்வமதங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வழிபாட்டை நாம் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக பயன்படுத்துவோம். எமது வழிபாட்டுத் தலங்களில் ஒரே மனதாய் எமது சமாதானத்துக்காகவும், நிம்மதியான வாழ்வுக்காகவும் வேண்டுவோம். ''எங்கே என் பெயரால் இருவர், மூவர் கூடியிருக்கிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருக்கின்றேன். அவர்கள் வேண்டுதலை நிறைவு செய்வேன்'' என்ற இறைவனின் வார்த்தை நிறைவு பெறும் என்ற நம்பிக்கையில் வேண்டுவோம்.

இறைவனின் இரக்கத்தால் அரக்கத்தனமான நடவடிக்கைகள் முற்றுப்பெறவும், கல்மனங்கள் கரைந்து நல்ல தீர்வுகள் ஏற்படவும் பிரார்த்திப்போம்.

# உருவம் கண்டு இறைவனை வணங்குதல் விக்கிரக ஆராதனையா?

கண்ணைக் கொண்டு காணும் உருவம் கருத்தில் நிலையாகப் பதியும். உருவம் வேண்டாம் வெறுமை போதும் என்பது மடமையாகும். நம் கண்ணும் கருத்தும் காண்பது முதலில் மண்ணையும் விண்ணையும் தான். அதன் பின் காண்பது தாயையும் தந்தையையும் தான். இவை எல்லாம் உருவத்தின் அடையாளங்கள். எழுத்தும் உருவம், வரைந்திடும் ஓவியமும் உருவம். உருவமே வேண்டாமெனில் நாம் வாழ்வதில் பயனில்லை. வாழும் மனிதா! நீ உள்ளத்தால் உணர்ந்து அறிய வேண்டியது, நீ இறப்பது திண்ணம். அதற்கு முன் உருவத்தின் அடையாளத்தின் மூலமே இறைவனின் தொடர்பு விண்ணிலும் மண்ணிலும் இருப்பவைகளை நோக்கி புரிந்து கொள்ளுதல் அவரின் அன்பின் அடையாளங்கள், பாசத்தின் அடையாளங்களாம்.

இறைவன் உன்னுடைய பசி தாகம் தீர்ப்பதற்கு தந்தவைகள் யாவும் உருவங்கள் தானே. இவ்வுருவங்களைப் படைத்த இறைவனை நீயும் போற்றுதல் அவசியமே. உருவம் கண்டு உள்ளம் மகிழ். நீயும் அந்த உருவத்துக்கு உரிய இடந்தன்னைக் கொடுக்க வேண்டியது அவசியம்.

உருவம் வேண்டாம் அடையாளம் வேண்டாம் என்பவரெல்லாம் கருமம் ஆற்றக் காரியம் செய்ய அவரால் முடியுமா? கண்ணுக்குக் கண்ணாடி முகத்தில் நாம் ஏன் மாட்டுகின்றோம்? கண்மணிகளுக்கு நோக்கும் பார்வையில் கவனம் செலுத்திடவே. கண்ணுக்குக் கண்ணாடி மாட்டுவது கண்ணாடியைப் பார்ப்பதற்கல்ல. கண்ணாடி ஊடாக முன்னால் உள்ளதைப் பார்ப்பதற்கே.

யேசுவின் சாயலை சுவரில் ஏன் மாட்டுகிறோம். நம்முடைய கருத்தையும் நினைவையும் இறைவனின் பக்கம் திசை திருப்பவே, உருவத்தின் ஊடாக நாம் அவரைத் தியானிப்பதற்கே, இதனை உணராது உளறுபவர்கள் எல்லாம் சாத்தானின் கூட்டமே.

உன் பசி தீர்க்கும் உணவும் நீரும் உருவங்கள் தானே, சிலுவையில் எம்மை மீட்டவர் உருவத்தைக் காணச் சகிக்காத சாத்தான் தன் சகபாடிகளைக் கொண்டு சரசமாடுகிறான். சாவை வென்ற யேசுவின் உருவத்தை மறைத்திடச் சாத்தான் துடிக்கிறான். அதனால் பலரைத் துரத்திப் பிடிக்கிறான்.

பஜனைபாடி, பைபிளின் வசனம் பேசி, கர்த்தா அவர் தான் எனச் சப்தமிடவைக்கிறான். இவர்களின் கவர்ச்சியின் மாயையில் பலர் தம் கருத்தையே மாற்றுகின்றனர்.

தொடர்பற்ற மதத்தில் இருப்போர் மாறுவது அதிசயமில்லை, ஆனால் நம் மதக் குடும்ப உறவில் வாழ்ந்து விட்டுப் பிரிந்த குடும்ப உறவில் சேரலாமா நாம்? குடுகுடுப்பைக் கும்மாளத்தால் குலைந்துவிடும் எம் வாழ்வும். உணர்வது உன் கடமை.

நேரே வாசல் வழியே வராதவன் கள்ளனும் கொள்ளையனுமே. நான் இதைச் சொல்லவில்லை. வரும் முன் வரலாறு வகுத்து வந்த பின் தொடர்ந்து இயங்க வைத்த இறைவன் யேசுவின் வார்த்தையே இது. தொடர்பற்றதெதுவும் செயலற்றது என்பதைத் தத்துவமாக்கியவர் யேசு. தொடர்பிலே வந்த மனிதன் ஏன் தொடர்பற்ற இறை வழியற்ற கும்பலில் சேர்ந்து வீணே அலைகிறான்? உன் மனதுக்குப் பிடித்தால் கடவுளுக்கும் ஏற்கும் என்னும் எண்ணமா உனக்கு? யேசுவே ஆண்டவரே என்று தாண்டவம் ஆடுபவர்யாரும் சேரவே மாட்டார் இறைவனுடைய அரசில்.

யேசுவின் வார்த்தை, பிதாவின் சித்தம் அறிந்து அரசின் தூதரகமாம் திருச்சபை அனுமதியில்லையேல் அவரின் விண்ணரசில் இடமே கிடையாது. இறைவழிசேராது தடுப்பதே சாத்தானின் தந்திரோபாயமாம். முறைவழி இணையாத மாந்தர்களைக் கொண்டே தடையான வழியைக் காட்டுகிறான். அருள் வழி அறிந்து அதன்வழி சென்றால் அவலம் உனக்கேற்படாது. அருள் மறை ஒன்றே, அதையே நீ தேடி நாடு.

சிலுவையில் மரித்தவர் உருவத்தைப் பொறித்திடல் நமக்கது திடமாகும். சவுகையை உணர்ந்து, சபலத்தை மறந்தால் நமக்கு அது அன்பும் அருளும், அறமுமாகும். அதனால் உருவத்தின் வழி நாம் இறைவனோடு இணைவோம் என்பது வெளிப்பாடு.

ஆக்கம்:— லோ. பங்கிராஸ்

## பிரான்சிஸ்கன் சபையின் புதிய நியமனங்கள்

புனித பிரான்சீஸ்கன் மறைபரப்பு சபையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட இந்தியாவை சேர்ந்த அதி சங். சிரேஷ்ர சகோதரர், ஜோச் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து இங்கு பணியாற்றும் பிரான்சீஸ்கன் சகோதரர்களின் பணிகளை நேரில்கண்டு உற்சாகமூட்டினார்.

புதிய தலைவர் சென்றஇடம் எங்கும் வழிபாடுகளாலும், கலைகலாச்சார நிகழ்ச்சிகளாலும் வரவேற்கப்பட்டு சிறப்பித்ததை மகிழ்வோடு பாராட்டினார். இலங்கை பிரான்சீஸ் சகோதரர்களின் உற்சாகத்தையும் அவர்களின் பணிவாழ்வில் எதிர்கொள்ளவேண்டிய தேவைகளையும் நேரில் காண கிடைத்த சந்தர்ப்பத்தினை இட்டு மகிழ்வடைவதுடன் புனித பிரான்சீஸ் அசீசியாரின் வழியில் எமது பணிவாழ்வும், காலத்துக்கு ஏற்ப தேவைகளை உணர்ந்து பணிவாழ்வில் முயலுதலும் நல்ல மாற்றங்களை முன்னேற்றங்களுக்காக செயல்படுத்த வேண்டும் என தனது நன்றி உரையில் குறிப்பிட்டார்.

மாத்தளை புனித பிரான்சீஸ்கன் தலைமை இல்லத்தில் ஒன்றுகூடலுடன் புதிய சபை நிர்வாக தேர்வும் அவர் தலைமையில் பங்குனி 25—ம் திகதி நடாத்தப்பட்டது.

இலங்கை புனித பிரான்சீஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் பிராந்திய புதிய சிரேஷ்ர சகோதரராக அருட் சகோ. ஜெரமி கிறிஸ்ரி அவர்களும், ஆலோசகர்களாக அருட் சகோ. செ. தொபிதாஸ், அருட் சகோ. ஜஸ்ரஸ், அருட் சகோ. கிறேசியன் ஆகியோரும் தெரிவானார்கள்.

## தலைமைத்துவ அபிவிருத்திப் பாசறை

யாழ் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கதின் ஆதரவில் நடாத்தப்பட்ட ''தலைமைத்துவ அபிவிருத்திப் பாசறை'' வைகாசி மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்த பாசறையில் பிரதம பொறுப்பாளராக யாழ் பேராலய பங்குதந்தை S. H. ஜெபநேசன் அடிகளாரும் இயக்குனராக திரு W. தேவகடாசம் அவர்களும் ஒழுங்கமைப்பாளாராக யாழ் பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட் திரு T. தவராஜசிங்கம் அடிகளாரும், ஆலோசகர்களாக யாழ் பேராலய உதவிப் பங்குத்தந்தை J. J மவுலிஸ் அடிகளாரும், அருட்சகோதரிகள் ஸ்ரெலாபுஸ்பம், அழகேஸ் ஆகியோரும் கடமையாற்றினர். ஏறக்குறைய 50 இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர். இவர்கள் நீலம், சிவப்பு, மஞ்சல் என மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இம் மூன்று குழுக்களுக்கும் தலைவர், உப தலைவர் தெரிவு செய்யப்பட்டனர்.

காலை 9.30 மணிக்கு அன்றைய பாசறை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. உள்ளத்திற்கும் உடலுக்கும் உற்சாகமளிக்கும் விதத்தில் விளையாட்டுகள் இடம் பெற்றன. சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் புதிர் போட்டிகள் இடம் பெற்றன. அன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க அம்சமாக அருட்தந்தை S. H. ஜெபநேசன் அடிகளாரின்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் : உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

இளைஞர் உலகம்

# வாழ்க்கை ஒரு பாரச் சுமைதானா?

கண் விழிகள் சிவந்து, கால் நடைகள் தளர்ந்து, கசங்கிய உடையுடன், என் கண் எதிரே ஒருவன் வருகின்றான், யார் அவன்,? ஏன் இந்தக்கோலம்,? என்னையறியாமலே அவனை அண்மிக்கிறேன், "வாழ்வே மாயம், இந்த வாழ்வே மாயம்" என்ற முணுமுணுப்பு என் காதிலே இலேசாகப் படுகின்றது. நல்ல தண்ணி மாட்டி விட்டார் போலும், இவரைக் கண்ட பின்னர், இன்னொரு இடத்தில் ஒரு இளைஞரை கண்டேன். சுமார் 25 வயது வரை இருக்கும், முகத்திலே சுருக்கும், அடர்ந்த தாடியும், அவரின் உள்ளக்கிடக்கையைத் தெளிவு படுத்துவதாக விளங்கியது. மெல்ல அண்மித்தேன், சிறிது அறிமுகம், தன் வாழ்க்கையிலே அடைந்த விரக்திகளை விரல் விட்டு எண்ணுகின்றார். விரல்கள் பலதடவை மடிந்து நிமிருகின்றன. கடைசியில் "ஏன் தான் மனிதனாகப் பிறந்தேனோ? என்ன வாழ்க்கையப்பா இது" என்றும் கடிந்து கொள்கின்றார்.

சனங்கள் கூடுகின்ற நாற்சந்தி. வயது போனமூதாட்டி குளறி அழுகிறாள், மெல்ல அவளருகே அண்மிக்கிறேன், "தம்பி, என்ர மகன் என்னோட கோபிச்சுக் கொண்டு எங்கேயோ போய் விட்டான், இவ்வளவு கஷ்டப்பட்டு பெத்து வளர்த்தும் கஷ்டத்தைத் தானே அனுபவிக்கின்றேன். இதனால என்னதான் சந்தோஷம். பெத்த வயிறு பற்றி எரியுதையா," என்றே பாரத கண்ணீர்க்காண்டம் தொடர்கிறது. "இதுகளோட வாழ்வதைவிட செத்துப்போறதே உத்தமம்" என்றதும் தூக்கி வாரிப் போட்டதைப் போல மெல்ல நடைபயின்று அப்பால் செல்கின்றேன். அன்றைய புதினப் பத்திரிகையைப் புரட்டுகின்றேன். "வாழ்க்கையில் விரக்தியுற்ற தன் காரணத்தாலே தான் இளைஞர்கள் பல கோடிக் கணக்கானோர் போதை வஸ்திடம் சரணடைகின்றனர்......" என்று பெரிய ஆசிரிய தலையங்கத்தைக் கண்டதும் என் தலையும் சுற்றுகின்றது.

அன்று நண்பகல் வேளை பாடசாலை விட்டு விட்டது. நான் தனியாக வந்ததால் ஒரு பையனையும் ஏற்றிக் கொண்டு வருகிறேன். பல கதைகள் தொடர் கதையாகி "இது என்ன தம்பி" என்று ஒரு அழகான சிறிய கொப்பிபோன்றதை எடுத்தேன். "இது எல்லோரட்டையும் கொடுத்து சையின் வாங்கும் ஓட்டோகிராப்" என்றான். முன் அட்டையை விரித்தேன். "நண்ப, வாழ்க்கை என்பது மலர்கள் தூவிய பஞ்சணை மெத்தையல்ல, பாசிநிறைந்த பயங்கரப் பாதை. விழித்து நடந்து கொள், வழுக்கி விழுந்திடாமல்!" என்ற வாசகம் என் நெஞ்சத்தை அறுப்பது போலத் தோன்றியது. எவ்வளவு கருத்துள்ள வசனம் இது என அளவிடைபோட்ட வண்ணம் கடை ஒன்றின் முன்னால் செல்கின்றேன். "வாழ்க்கையே கொஞ்சக் காலம் தான்......" என்ற வரிகள் இன்னிசையாக செவி நுகர்கின்றன, வாழ்க்கை என்பது உண்மையில் அப்படி என்ன ஒரு விரக்தி எல்லோர் மனதிலும் என்பதைக் காண சுழலும் உலகில் நானும் சுழல்கின்றேன், விடையைத்தேடி...

மரியாம்பிள்ளை றோமியல்
ஆரோபணம்
D - 8 கிளிநொச்சி

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு - 75

குருசு:- என்ன தம்பி இந்தப்பக்கம் அடிக்கடி ?

அடைக்கலம்:- இதில ஒரு காணி பாத்திட்டு வாறன் அண்ணே.

குருசு:- ஏன்ரா தம்பி, அங்கதான் இரண்டு மூன்று காணி வழக்கு கிழக்கா இருக்கேக்க பிறகு ஏன் இஞ்சயும் அலையிறாய் தம்பி.

அடைக்கலம்:- அண்ணே! மலிவா வரேக்க தட்டிப் போடவேண்டும். வேண்டி விட்டிட்டா பிற்காலத்தில உதவும் எல்லோ.

குருசு:- அது சரி பிற்காலத்தில உதவிறதுக்கு இப்பவே சேக்கிறியே. இக்காலத்தில இருக்க இடமில்லாமல் வந்த சனங்களுக்குத் தானே இடம் கொடுக்காம வழக்குக் கிழக்குப் போட்டு வீதியில விட்டிட்டாய் உன்ர சகோதரங்களை.

அடைக்கலம்:- அதுக்கு என்னண்ணை செய்யிறது? இருக்க விட்டா இடத்தைப் பிடிச்சிருவினமே.

குருசு:- இதில கருத்தாய் இருந்து கொண்டு கோயில்ல போய் சமாதானம் வேற சொல்லுறியளே.

அடைக்கலம்:- எல்லாத்திலயும் இரக்கம் காட்டேலாது பாரு அண்ணே.

குருசு:- எடதம்பி, "உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் ஆன்மாவை இழந்தால் அதால பயன் ஏது எண்டதையும் யோசி. பின் செத்த வீட்டில போய் கண்ணீர் விட்டு நடிக்காம.

## கடன் கொடுங்கள் கணக்கில் வரவு வரும்

பொன்னும் மணியுமல்ல பொருள் பண்டமல்ல
பொறுமையைக் கடன் கொடுங்கள்
அமுக்கிக் குலுக்கியல்ல அள்ளிச் சொரிந்துமல்ல
அன்பினைக் கடன் கொடுங்கள்
மாடமாளிகையல்ல கூட கோபுரமுமல்ல
மன்னிப்பைக் கடன் கொடுங்கள்

★

காணிபூமியல்ல மனையும் பொருளுமல்ல
கண்ணியத்தைக் கடன் கொடுங்கள்
நகையும் நட்டுமல்ல சொத்து சுகமுமல்ல
நற்பண்பதனைக் கடன் கொடுங்கள்
வாரியிறைத்துமல்ல வழித்துத் துடைத்துமல்ல
வாய்மைதனைக் கடன் கொடுங்கள்

★

வாழ வழியின்றி வருந்தும் வறியவர்க்கு
மானம் கொடுங்கள் தானம் கொடுங்கள்
பணத்தைக் கடன்கொடுத்தால் பிணம் வரைதான் கூடவரும்
குணத்தைக் கடன் கொடுங்கள் குவலயமே வாழ்வுபெறும்
அழிவுள்ள கடனையல்ல அழிவில்லாக் கடன் கொடுங்கள்
ஆண்டவன் வங்கிக் கணக்கில் வரவு வரும்

— அபிரான் —
243, யாழ், வைத்தியமனை வீதி.

## சிதறியமுத்து

நட்பு என்பது கண்ணுக்குப் புலப்படாத ஓர் அன்பு ஊற்று. அது எங்கே தோன்று கிறது– எப்போது உண்டாகிறது என்று யாராலும் சொல்ல முடியாது.

## உடையும் வாசனையும்

வாசனைப் பொடிகள், சந்தனம் பூசுவது உடலுக்கு நலம். ஆடம்பரமல்ல. இதனால் கபம், கொழுப்பு முதலியவை கரைந்து விடுகின்றன. நல்ல உடைகளை உடுப்பது கூட ஆடம்பரமல்ல. அவை உடல் நலனுக்கு இன்றியமையாதவை.

## காவலன் கண்மணிகள்

ஒளி: 6
சுடர்: 9

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

**என்னகம் :**

அன்புக்கினிய கண்மணிகாள்!

உயிர்த்த யேசுவின் உன்னத வாழ்த்துக்கள் என்றும் உங்களுடன் இருப்பதாக.

இன்று கட்டளைகள் எல்லாம் கட்டு அறுந்து. களை இழந்து விட்டன எனப்பெரியோர் அங்கலாய்க்கின்றனர். பெற்றோர் கதறுகின்றனர், ஆசிரியர் அலறுகின்றனர். ஏன் இந்த நிலை? இந்த நிலையை மாற்றமுடியாதா? மாற்றமுடியும், எப்படி மாற்றமுடியும்?

நம் தலைவர், இயேசு கூறிய நல்ல சமாரியன் உவமையை பல முறை படித்துப் பாருங்கள். அவ்வுவமையில் அடங்கியிருக்கும் அன்புச் செய்தியை உங்கள் உள்ளத்தில் பதித்துக் கொள்ளுங்கள்.

இன்றைய சூழலில் இதைவிடச் சிறந்த வழியை யாரும் எடுக்குக் காட்ட முடியாது. ஆகவே

மத். 22 : 34–40

மாற். 12 : 28–34

லூக். 10 : 25–28 ஆகிய பகுதிகளைப் படித்துத் தியானியுங்கள்.

இவ்வழி செல்லும் போது அமைதியின் பாதை இதுவென்று நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

என்றும் உங்கள் அன்பின்
அன்பு விழி

### சிந்தனைக்கு மருந்தும் விருந்தும் (தொடர்ச்சி)

செப நேரத்தில் அரட்டை அடித்த தந்தை, செபவாழ்வில் அக்கறையற்று இருந்த தந்தை மகளின் சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டார். சிந்தித்தார், கடவுளிடம் திரும்பினார். சிறு குழந்தைகளின் கண்கள் நம்பிக்கையுடன், அன்புடன் வியப்புடன் நோக்கும் போது பெற்றோரின் மனது இளகும்.

### நல்வழி நம் வழி
### பிறர் பொருள் போற்றுதல்

1. நம்மைப்போல் பிறரையும் நேசிப்போம்.
2. எம்பொருள் போலவே பிறர் பொருளையும் போற்றுவோம்.
3. கல்விக்கூடத்தின் பொருள்களையும் போற்றி வாழ்வோம்.
4. பொது இடங்களில் பொறுப்புடன் நடப்போம்.
5. கண்டெடுத்த பொருளை உரிய இடத்தில் சேர்ப்போம்.

### யார் இவர்?

என்ற பகுதியில் எட்டுப் புனிதர்களின் குறிப்புகள் தரப்பட்டன. இவர்களின் பெயர்களை சுடர் இலக்கமிட்டு பின் வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

**யார் இவர்?**
காவலன் கண்மணிகள்
பாதுகாவலன் அ. பெ. இல. 2.
யாழ்ப்பாணம்

உக்கள் விடையுடன் அங்கத்துவ எண்ணையுங் குறித்தனுப்ப மறக்கவேண்டாம்.

முடிவுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசு உண்டா? சரியான விடை அளிப்பவர்களுள் நற்பேறாளர் மூவருக்குப் பரிசு உண்டு. மற்றவர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும்.

**அங்கத்துவம்:**

ஆண்டு 6 தொடக்கம் 11 வரை கற்போர் கௌரவ அங்கத்துவம். விரும்பியோர் விண்ணப்பிக்கலாம்.

(1) பெயர் (2) கற்கும் ஆண்டு
(3) பாடசாலையின் பெயர் (4) வீட்டு முகவரி.

ஆகிய தரவுகளுடன் உங்கள் விண்ணப்பத்தை அனுப்புங்கள்.

## ஊக்குவியுங்கள் வாசகர்களே!

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். 'யாம் பெற்ற இன்பம் பெறுக, இவ்வையகம்,' நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறிய முடியும்? மறைவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவறாது பாதுகாவலன் வாசிக்கப் பழகிக்கொள்ள நீங்களே துணை புரிய வேண்டும்.

ஆர்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

# அரச அலுவலர் அரசியல் வாதிகள் துணை திருச்சபைக்குத் தேவை

அரசாங்கத்தில் திருச்சபைக்கு மாறான சக்திகள் செயற்படும் போது கத்தோலிக்க அரச அலுவலர்களும் அரசியல்வாதிகளும் திருச்சபைக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென ஜகார்ட்டா பேராயர் லியோ சொக்கோட்டோ அவர்களுக்கென நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினார்.

அம்மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் புதிய ஆலயங்களை அமைப்பதற்கு அரச அதிகாரிகளாலும் முஸ்லிம்களாலும் தடைகள் போடப்படுகின்றன. முஸ்லீம்கள் சிறு சிறு மசூதிகளைக் கட்டிவிட்டால் அதற்கு அண்மையில் கத்தோலிக்க ஆலயம் அமைப்பதற்கு அனுமதி பெறுவது கஷ்டமாயிருக்கிறது.

ஆகவே கத்தோலிக்கரின் உரிமைக்காகப் போராடி பஞ்சசீலக் கொள்கையில் கூறப்பட்டுள்ள மத சுதந்திரத்தை நிலைநாட்ட முயல்வது கத்தோலிக்க அரச அலுவலர், அரசியல் வாதிகளின் பொறுப்பாகும் என ஆயர் சொக்கோட்டோ மேலும் கூறினார்.

## அருணாசலப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு திருச்சபை உதவக்கூடும்

இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்து இப்போது முதன் முறையாக கிறிஸ்தவம் அருணாசலப் பிரதேச மக்களுக்கு உதவக்கூடும் என அப்பிரதேச அமைச்சர் ஒருவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

முக்குத் மித்தி என்னும் இந்த அமைச்சர் கிறிஸ்தவ பாடசாலைகளும் மறைபோதகரும் அம்மாநிலத்தில் வாழும் 900,000 மக்களுக்கு சமூக பொருளாதாரரீதியில் உதவக் கூடும் எனக் காங்கிரஸ் கட்சிக் கூட்டமொன்றில் கூறியுள்ளார். மேற்கத்திய பண்பாடு அங்குள்ள பூர்வகுடிகளிடம் பரவி விடும் என்ற காரணத்தைக் காட்டி கிறிஸ்தவ மதகுருமார் அம்மாநிலத்துட் பிரவேசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

செல்வாக்குள்ள ஒரு சிலர் தமது பிள்ளைகளைப் பிறமாநிலங்களிலுள்ள கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். கிறிஸ்தவ வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுகின்றனர்.

## தலைமைத்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

''தலைமைத்துவ பண்புகள்'' என்னும் தலைப்பில் அவர் ஆற்றிய உரை அமைந்திருந்தது. பாசறை இயக்குனர் திரு. W. தேவகடாட்சம் அவர்களால் ''உள்ள, உணர்வுகள், உறவுகள்'' எனும் தலைப்பில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகள்பற்றியும், உள்ளம், உணர்வுகள், உறவுகள் இணைந்த மனித பண்பு பற்றியும் எடுத்து விளக்கப்பட்டது. இவற்றிடையே மனதிற்கு இன்பமளிக்கும் பிறமொழிப் பாடல்களை யாவரும் சேர்ந்து பாடினர். மதிய இடைவேளையின் பின் முதலுதவி பற்றியும் முதலுதவியாளன் கடைப்பிடிக்க வேண்டியவை, முதலுதவியாளனுக்குரிய பண்புகள் பற்றியும், பாசறை இயக்குனரால் அறிவுறுத்தப்பட்டன. இன்றைய உலக வரலாறுகளை கறைபடிந்ததாக மாற்றி வரும் போதைப் பொருள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. போதைப் பொருள் ''மனித வாழ்வின் வேரறுக்கும் கோடாரிக்கு ஒப்பாகும்'' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. மாலை சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்ற Kims games ல் அனைவரும் புத்துணர்ச்சியுடன் கலந்து கொண்டனர். 17 ஆம் திகதி, பாசறை சேர்ந்து பாடுவோம் நிகழ்ச்சியுடன் ஆரம்பமானது. ''தலைமைத்துவம்'' பற்றி ஒவ்வொருவரும் தன்னை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் வினாக்கொத்து வழங்கப்பட்டது. மூன்று குழுக்களாலும் தயாரிக்கப்பட்ட ''பாசறை செய்திச் சுடர்'' நிகழ்ச்சி நடைபெற்றது. மதிய இடைவேளையின் பின் தமிழ் ஆங்கில நாவன்மைப் போட்டிகள், கவிதை அரங்கு, நாடகம், மூன்று குழுக்களாலும் மெட்டிசைக்கப்பட்ட பாடல்கள் போன்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பிரதம விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளைத் தலைவர் வைத்தியகலாநிதி நச்சினாக்கினியர், உபதலைவர் திரு. J. G. ராஜேந்திரம் செயலாளர் திரு. சிவானந்தராஜா ஆகியோர் வருகை தந்திருந்தனர். மாலை 6 மணியளவில் பாசறை நிறைவு பெற பாசறைத் தோழர்கள் யாவரும் ''வாழ்வில் மறக்க முடியாத பாசறை நாள் தந்த பசுமை நிறைந்த நினைவுகளுடன்'' பாசறையிலிருந்து வீடு திரும்பினர்.

செல்வி:- நிரோன் அமலதாஸ்
கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

## சீனக் கிறிஸ்தவரின் செய்தி வெளியீடு

சீனாவிலும் உலகின் ஏனைய பாகங்களிலுமுள்ள கிறிஸ்தவரிடையே தற்போது தொடர்புகள் அதிகரித்து வருவதால் சீனச் செய்திகளைத் தாங்கிவரும் ஓர் ஆங்கில ஏட்டின் அவசியம் அண்மையில் உணரப்பட்டது. இச்செய்திகளை அளிக்கும் நோக்குடன் ஹொங்கொங்கிலிருந்து அமிற்றி நியூஸ் சேவீஸ் என்னும் இருமாத இதழ் வெளிவந்துள்ளது. தனிக் கிறிஸ்தவர்கள், தலத் திருச்சபைகள், கிறிஸ்தவ நிறுவனங்கள் பற்றிய செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவதே இந்த இதழின் நோக்கமாகும்.

முதலாவது இதழில் ஜனவரி மாதம் பெய்ஜிங்கில் நடைபெற்ற தேசிய சீன கிறிஸ்தவ மகாநாட்டின் அறிக்கைகள் இடம்பெறுகின்றன.

ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும்; அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும். மாற்கு. (9:35)

## 22 வது நினைவஞ்சலி



செல்வி:-
மிரியம் ஷாமினி சில்வெஸ்ரர்
அன்னையின் மடியில்:-
06-10-62
ஆண்டவன் அரவணைப்பில்:-
26-06-70

ஆண்டு இருபத்திரெண்டு மறைந்தாலும் அன்பு முகம் மறக்கவில்லை. ஆண்டவன் திருவடியில் நீர் வாழ அனுதினமும் வேண்டுகிறோம்.

தாய், சகோதரர்கள்
உற்றார், உறவினர்கள்
128, 3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம். A/19/92

## 3ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



செல்வன் நவரெட்ணராசா
அன்ரன் பிரிதிவிராஜன்
(பியூட்டி)
அன்னை மடியில்
23-03-1976
ஆண்டவனடியில்
16-06-1989

சர்வதயாபர யேசுவே!


சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்று உமது சீடர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளினீரே, எங்கள் செல்லப் பியூட்டி உம்முடைய சம்மனசுகளுடன் உமது திருப்பாதங்களிலே பூசை செய்து பேரின்ப வாழ்வில் என்றென்றும் அக்களிக்கச் செய்தருளும்.

ஆண்டவரே! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இவரது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, உறவினர், நண்பர்கள். A/16/92

## விண்ணகத்தில்

6ஆம் வருடம் 9ஆம் வருடம்



திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை (நாகசெட்டி)

| | |
|---|---|
| தோற்றம்:- 15-10-1918 | தோற்றம்:- 04-04-1908 |
| மறைவு:- 19-06-1986 | மறைவு:- 07-04-1983 |

இரக்கமுள்ள எம் தந்தாய் உமது விசுவாசத்தில் வாழ்ந்து மரித்த உமது அடியார்கள் திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை இவர்களுக்காக உம்மிடம் வருந்தி வருகிறோம். நீர் இவர்களுக்கு அளித்த எல்லா வளங்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவர்கள் விசுவசித்த வாழ்வின் பயனை அடைய வேண்டுகிறோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 18-06-92 வியாழக்கிழமை காலை 6மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவின் நினைவில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பற்றிமா வாசா
சில்லாலை

நாகசெட்டிகமம்
நானாட்டான் A/17/92

## ஆண்டவன் அடி இணைந்த முதல் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அந்தோனிப்பிள்ளை
திரேசம்மா (மலர்)
மலர்வு:- 1935-03-27
உதிர்வு:- 1991-06-23

பண்பிலும் பாசத்திலும் எம்மைப்பேணி வளர்த்த அன்புத் தாயே, தியாகத்தின் சுடரே உங்களை எங்கள் வாழ்நாள் முழுதும் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் 23.06.92 செவ்வாய்க்கிழமை காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

A/18/92

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**